உ

"அருள்மிகு அய்யன் திருவடி போற்றி"



மஞ்செனத் திகழும்தூய கிளுவைமரச் சோதியாகத்
தஞ்சமென் றடைந்தபேர்க்குத் தனிப்பெரும் கருணையினால்
அஞ்சேலென அருள்புரிய வாழைவனத் தய்யன் திருக்
கஞ்சமொத் தலர்ந்ததாளைக் கணம்மறவா தேத்துவோமே !

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், **அய்யம்பாளையம்**

# அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில்

## மகா கும்பாபிஷேகத் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ்

**துன்முகி வருடம் கார்த்திகை மாதம் 20 -ம் தேதி ( 05-12-2016 ) திங்கட்கிழமை**
**காலை 6.00 மணிமுதல் 7.00 மணிக்குள்**

Cell : 0421 2322250
Web : www.ayyantemple.tnhrce.in

# அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில்

**அய்யம்பாளையம்,** பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

பேரன்புடையீர், வணக்கம்

பார்புகழும் கொங்குவள நாட்டில் அய்யம்பாளையம் கிராமத்தில், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனக் கொண்டு தம் வாழ் நாட்களைப் பயன்படுத்தி மாண்பு பெற்ற பெரியோர்களில் ஒருவராகத் திகழ்ந்த கொங்கு வேளாளர் மரபில் தோன்றிய சின்னையன் எனும் பெரியார், சிறுவயதில் துறவியர் ஒருவரால் ஆட்கொண்டு, பஞ்சாட்சரமும், சர்வ விஷ மந்திரமும் உபதேசமாகப் பெற்று, தன்னைச் சன்மார்க்கத்தில் ஈடுபடுத்தித் தன்னை நாடிவரும் நோயுற்றவர்களுக்கும் பாம்பு, தேள் முதலியவற்றின் விஷக் கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், கைம்மாறு கருதாது அவர்கள் வளமுடன் வாழ, சிகிச்சை அளித்து அருள்செய்தார். சிறு வயதில் வாழைத் தோட்டம் குத்தகைக்கு எடுத்துப் பார்த்து வந்ததால் அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் என அன்புடன் அழைக்கப் பெற்று வந்தார். தனது 72 -வது வயதில், தான் வளர்த்து வந்த காளைமாடு முட்டியதில் ஆன்ம முக்தியடைந்தார்.

அவரது மறைவிற்குப் பிறகு அவர்தம் வழிவந்த மக்கள், அவரது தோட்டத்தில் உள்ள கிளுவை மரத்தின் அடியில், அவர் வழிபட்ட சிவலிங்கத்தையும், நந்தியையும் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தனர். அதன் அருகே பாம்புப் புற்று ஒன்று உண்டானது. பின்னாளில் மக்கள் அனைவரும் சிவலிங்கதை வழிபட்டு, புற்று மண்ணையே அரு மருந்தாக ஏற்று வழிபாடு செய்து, அனைத்து விஷப் பயங்களும் நீங்கி நலம் பெற்றனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யனுக்கு, கவின்மிகு ஆலயம் ஏற்படுத்தி, சுமார் 300 ஆண்டுகளாக வழிபாடு செய்து வருகின்றனர். தற்சமயம் அருள்மிகு அய்யன் திருக்கோயில் திருப்பணிகள் சிறப்பாக நடைபெற்று

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

**புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**

**சீர்மிகு நல்லாட்சியில்**

மங்களகரமான துன்முகி வருடம் **கார்த்திகை மாதம் 20 -ம் தேதி (05.12.2016) திங்கட்கிழமை** வளர்பிறை சஷ்டி திதியும், திருவோண நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் **காலை 6.00 மணிக்குமேல் 7.00 மணிக்குள்** விருச்சிக லக்கினத்தில் மடாதிபதிகள், ஆன்மீகச் சான்றோர்கள், அமைச்சர் பெருமக்கள், மக்கள் பிரதிநிதிகள், பக்த கோடிகள் ஆகியோர் முன்னிலையில் **மகா கும்பாபிஷேகம்** நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது.

எனவே பக்தகோடிப் பெருமக்கள் அனைவரும் இப்பெருஞ்சாந்தி மகா கும்பாபிஷேகப் பெருவிழாவில் கலந்து கொண்டு, கண்ணினால் நல்விழாப் பொலிவுகண்டு, அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யனின் திருவருள் பெற இரு கரம் கூப்பி வருக ! வருக ! என அன்புடன் அழைக்கின்றோம்.

# அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில்

**அய்யம்பாளையம்**, பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

## அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யனின் அருள்மணம் கமழும் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| கார்த்திகை மாதம் 16 –ம் தேதி (01-12-2016) வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் | ஸ்ரீவிக்னேஷ்வர பூஜை, ஸ்ரீ மகாகணபதி யாகம், அனுக்ஞை தன ஹோமம், நவக்கிரக யாகம். |
| கார்த்திகை மாதம் 17 –ம் தேதி (02-12-2016) வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிமுதல் | வாஸ்து சாந்தி மிருத் சங்கிரணம், அங்குரார்ப்பணம் பிரவேச பலி |
| கார்த்திகை மாதம் 18 –ம் தேதி (03-12-2016) சனிக்கிழமை காலை 10.30 மணிக்குமேல் | ரக்ஷாபந்தனம், காலகர்ஷணம், கும்பஸ்தாபனம், கும்பம் யாக சாலை பிரவேசம். |
| மாலை 6.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை | முதல் கால வேள்வி பூஜை துவக்கம் மண்டபார்ச்சனை, வேதிகார்ச்சனை, மூலமந்திரஜெபம், திரவ்யாஹுதி, பூர்ணாஹுதி, தீபாராதனை, அருட்பிரசாதம் வழங்குதல் |
| கார்த்திகை மாதம் 19 –ம் தேதி (04-12-2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 – 12.00 மணிவரை | இருள்வினை அகற்றும் அய்யனுக்கு இரண்டாம் கால வேள்வி பூஜைகள் வேதிகார்ச்சனை, மூலமந்திரஜெபம், திரவ்யாஹுதி, பூர்ணாஹுதி, தீபாராதனை, அருட்பிரசாதம் வழங்குதல் |
| மாலை 6.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை | மூன்றாம் கால வேள்வி பூஜை துவக்கம் மண்டபார்ச்சனை, வேதிகார்ச்சனை, மூலமந்திரஜெபம், திரவ்யாஹுதி, பூர்ணாஹுதி, தீபாராதனை, அருட்பிரசாதம் வழங்குதல் |
| இரவு 10.00 மணிவரை | முக்காலம் உணர்ந்த அய்யனுக்கு மூன்றாம் கால வேள்வி பூஜை, திரவ்யாஹுதி, பூர்ணாஹுதி, தீபாராதனை, அருட்பிரசாதம் வழங்குதல், அஷ்டபந்தனம் சாத்துதல். |
| கார்த்திகை மாதம் 20 –ம் தேதி (05-12-2016) திங்கட்கிழமை காலை 4.00 மணிமுதல் | நான்மறை உணர்ந்த அருள்மிகு அய்யனுக்கு நான்காம் கால யாக பூஜைகள் நாடி சந்தானம், ஸ்பர்ஸாஹுதி, மகா தீபாராதனை |
| காலை 6.00 – 7.00 மணிக்குள் | **மகா கும்பாபிஷேகம்** நடைபெறும். தசதரிசனம், தசதானம், மகா அபிஷேகம், மஹா தீபாராதனை, அருட்பிரசாதம் வழங்குதல், மங்கள ஆரத்தி |

சுபம்

இத்திருக்கோயிலில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா மிகச் சிறப்புடன் நடைபெற உள்ளது. அதுசமயம் பக்தகோடிகள் பெருமக்கள், மெய்யன்பர்கள், பெருவிழாவில் கலந்து கொண்டு அருள்மிகு அய்யனின் திருவருள் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**செ. மாரிமுத்து**
தக்கார்/துணை ஆணையர்/செயல் அலுவலர்
அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்,
பண்ணாரி



**வெ. செல்வம்**
உதவி ஆணையர்/செயல் அலுவலர்
அருள்மிகு வாழைத்தோட்டத்து
அய்யன் திருக்கோயில், அய்யம்பாளையம்.



"அருள்மிகு அய்யன் திருவடி போற்றி"

# அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில்

**அய்யம்பாளையம்**, பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.